# Centre for Research on the Economics of Ageing

SMU SINGAPORE MANAGEMENT UNIVERSITY

NEWSLETTER - ISSUE 1 JANUARY 2016




# முதுமை மற்றும் ஓய்வு காலத் தேவைப்பாடுகள்

அதிகரித்து வரும் வாழ்நாள் மற்றும் குறைந்த பிறப்பு விகிதங்களால், உலகளவில் அதிகளவு மூப்படையும் மக்கள் தொகையைக் கொண்ட நாடாக சிங்கப்பூர் உள்ளது. மூத்த சிங்கப்பூரர்களின் (65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர்) எண்ணிக்கை 2030ம் ஆண்டிற்குள் 900,000 ஆக மூன்று மடங்காகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பணிபுரியும்-வயதைக் கொண்ட குடியிருப்பாளர்கள் மற்றும் மூத்தக் குடியிருப்பாளர்களுக்கு இடையிலான தற்போதைய விகிதம் 6:1 ஆகும். இந்த விகிதம் 2030ம் ஆண்டுக்குள் 2:1 என்று வீழும் என்றும், 2060-க்குள் 1.5:1 -க்கும் குறைவாகச் செல்லும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நம்மில் பலர் ஓய்வுகாலத்தை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில், தற்போதைய நிதிப் பொறுப்புகள் குறித்த எண்ணமும், பொருளாதாரரீதியாக சார்ந்திருப்பதும் நமது மனதில் நிலைத்திருக்கின்றன:

- நான் வாழ்வதற்குத் தேவையான பொருளாதார வசதியை நான் பெற்றிருப்பேனா?
- எனக்குத் தேவைப்படும் மருத்துவப் பராமரிப்புக்கு என்னால் செலவு செய்ய இயலுமா?
- என் வீட்டின் மீது நான் செய்துள்ள முதலீடு பாதுகாப்பானதா, மேலும் நான் இதில் தங்கியிருப்பதற்கு எனக்கு கட்டுப்படியாகுமா?

சுகாதாரப் பராமரிப்பு, குடியிருப்பு மற்றும் ஓய்வுகால வருமானம் ஆகியவை குறித்த எனது கவலைகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன. நம்மில் பெரும்பாலானோர் தங்களுடைய மசேநி மீதத் தொகைகளை குடியிருப்பு மற்றும் சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளுக்காகத் திரும்பப் பெறுகின்றனர். இதன் விளைவாக சிங்கப்பூரர்கள் அதிக வீட்டு உரிமை விகிதத்தை (சுமார் 89%) அனுபவிக்கின்றனர், ஆனால் குறிப்பாக அதிகளவிலான சுகாதாரப் பராமரிப்புச் செலவினங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதால் நமது ஓய்வுகாலத்திற்காக நம்மிடம் பற்றாக்குறையான ரொக்க சேமிப்புகளே மீதம் இருக்கும்.

## FAQ

### முதுமைக்கால பொருளாதாரங்கள் குறித்த ஆராய்ச்சி நிலையம் (CREA) எதைச் செய்வதற்கு குறிக்கோள் கொண்டுள்ளது?

சிங்கப்பூர் மக்கள்தொகையைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற, குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பங்கேற்பாளர் குழுவின் நீண்ட-கால ஆய்வின் மூலம், இந்தச் சூழ்நிலை குறித்து விரிவாகப் புரிந்துகொள்வதற்கு முதுமைக்கால பொருளாதாரங்கள் குறித்த ஆராய்ச்சி நிலையம் (CREA) குறிக்கோள் கொண்டுள்ளது. அதே நேரத்தில், சுகாதாரம், குடியிருப்பு மற்றும் மசேநி ஆகியவற்றுக்கான சிங்கப்பூரின் கொள்கை கட்டமைப்புகளை நாங்கள் ஆய்வு செய்வோம். நாம் மூப்படையும் வேளையில் அவை எவ்வாறு நம்மைப் பாதிக்கும் மற்றும் புதிய கொள்கைகள் உள்ளிட்ட கொள்கை மாற்றங்கள் எவ்வாறு மேம்பட்ட விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்பது குறித்த ஆய்வுகள் இதில் உள்ளடங்கும்.

### இக்கருத்தாய்வு ஏன் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், உங்களிடம் ஏன் ஒவ்வொரு மாதமும் ஒரே கேள்விகளே கேட்கப்படுகின்றன?

இரண்டு ஆண்டு இடைவெளிகளில் மேற்கொள்ளப்படுகின்ற பெரும்பாலான தேசியக் கருத்தாய்வுகளைப் போலல்லாமல், இக்கருத்தாய்வு ஒரு மாதாந்தர அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கால இடைவெளியினால் நினைவுபடுத்திக்கொள்ள குறைந்த நேரமே எடுத்துக்கொள்ளும். இதன் மூலம் அதிகத் துல்லியமான அறிக்கையிடலுக்கு இது வழிவகுக்கிறது. முக்கியமாக, இது தங்களுடைய சூழ்நிலைகளில் உள்ள மாற்றங்களுக்குச் சிங்கப்பூரர்கள் எவ்வாறு பதில்வினையாற்றுகிறார்கள் என்பதை CREA-இல் உள்ள எங்களுடைய ஆராய்ச்சிக் குழு அடையாளம் கண்டறிய இயலச் செய்கிறது. இதன் விளைவாக, கொள்கை மாற்றங்களின் விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கான சாத்தியத்தை இது உருவாக்குகிறது. வருமானம், செலவினம், சுகாதாரம், பணி மற்றும் குடியிருப்புத் தேர்வுகள் குறித்த மாதாந்தரத் தகவல்களில் இருந்து பெறப்படும் நுண்ணறிவைக் கொண்டு இந்த ஆராய்ச்சியில் இருந்து பெறப்படும் முடிவுகள் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் மூப்படைதல் குறித்த துறையில் உள்ள



மருத்துவர்கள், கொள்கை உருவாக்குநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு பெரிதும் உதவும்.

**நீங்கள் ஏன் இக்கருத்தாய்விற்கு மிகவும் முக்கியமானவர்களாக உள்ளீர்கள்? எங்களுடைய சிங்கப்பூர் லைஃப் பேனல்® (SLP) பங்கேற்பாளர்களாகிய நீங்கள் இல்லாமல் இதை எங்களால் செய்ய முடியாது"**

நீங்கள் ஏன் இக்குழுவில் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள் என்பதும், இக்கருத்தாய்வுகள் ஒவ்வொன்றிலும் உங்கள் பதில்கள் ஏன் எங்களுக்கு மிகவும் முக்கியம் என்பதும் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஒரு சிங்கப்பூர் லைஃப் பேனல்® (SLP) பஞ்கேற்பாளராக, நீங்கள் காரணமில்லாமல் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். சிங்கப்பூர் புள்ளிவிவரத் துறை வகுத்துள்ள அளவீடுகளின் அடிப்படையில் நாங்கள் எங்களுடைய பங்கேற்பாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம். நீங்கள் ஒரு குறிப்பிட்ட வயதுக் குழுவைச் சார்ந்த தனிநபர் எனவும், சிங்கப்பூரில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வசிக்கிறீர்கள் எனவும் இந்த மக்கள்தொகையியல் தரவுத் தொகுப்பு உங்களை வகைப்படுத்துகிறது.

CREA-இல் உள்ள இந்த ஆராய்ச்சி ஆய்வில் எங்களுடைய SLP பங்கேற்பாளர்கள் ஒரு முக்கியப் பங்காற்றுகின்றனர். சிங்கப்பூரில் இந்த அளவிற்கு பெரிய மற்றும் குறைந்த கால இடைவெளிகளைக் கொண்ட ஒரு கருத்தாய்வு நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். சிங்கப்பூர் மக்கள்தொகையில் உங்களைப் போலவே உள்ள மக்கள் இக்கருத்தாய்வில் பிரதிநிதித்துவம் செய்வதால், கண்டறியப்படும் விவரங்களின் நம்பகத்தன்மை மற்றும் செல்லுபடித்தன்மையை உங்கள் பதில்கள் அதிகரிக்கின்றன. இது மூப்படையும் சிங்கப்பூரர்களின் சூழ்நிலை குறித்த துல்லியமான தகவல்களைப் பெறுவதற்கு எங்கள் ஆராய்ச்சிக் குழுவை அனுமதிக்கும். மேலும், இப்போதும் எதிர்காலத்திலும் நம்மை பாதிக்கின்ற சுகாதாரம், குடியிருப்பு மற்றும் மசேநி விவகாரங்களை மதிப்பிடுவதற்கும் அனுமதிக்கும்.

இந்த ஆராய்ச்சி ஆய்வில் பங்கேற்பது என்பது, நாம் அனைவரும் சந்திக்கின்ற பிரச்சனைகள் குறித்த நமது புரிதலுக்கு நீங்கள் பங்களிப்பதற்கான ஒரு மதிப்புமிக்க வழியாகும்.

# இரகசியக்காப்பு மற்றும் உங்கள் தனியுரிமை

நீங்கள் எங்களிடம் அளிக்கின்ற தகவல்களை நாங்கள் தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012 (PDPA) -இன் கீழ் மிகுந்த இரகசியத்துடன் வைத்துக்கொள்வோம். அத்தகவல்கள் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். மேலும், அவை புள்ளிவிவர வடிவத்தில் மட்டுமே எப்பொழுதும் அறிக்கையிடப்படும். நீங்கள் எங்களிடம் பேசுவதன் விளைவாக எந்த வீண் மின்னஞ்சலையும் ஒருபோதும் பெறமாட்டீர்கள். மேலும், உங்களுடைய விவரங்களை வர்த்தக நோக்கங்களுக்காக பிற அமைப்புகளிடம் நாங்கள் ஒருபோதும் அளிக்க மாட்டோம்.

# கருத்தாய்வுகளின் தேதிகள்:

எங்களுடைய கருத்தாய்வுகள் பின்வரும் குழுக்களுக்காக ஒவ்வொரு மாதமும், தேதிகளிலும் நடத்தப்படுகின்றன:

- ஜனவரி கருத்தாய்வு: **04 - 31 ஜனவரி 2016**
- பிப்ரவரி கருத்தாய்வு: **01 - 21 பிப்ரவரி 2016**
- மார்ச் கருத்தாய்வு: **01 - 20 மார்ச் 2016**

இக்கருத்தாய்வை நிறைவுசெய்ய உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், நீங்கள் இக்கருத்தாய்வை ஒரு கைக்கணினியில் நிறைவு செய்ய உங்களுக்கு உதவுதற்கு, நாங்கள் உங்களை ஒரு பொது நூலகத்திலோ அல்லது சமூக மன்றத்திலோ சந்திப்பதற்குத் தயாராக உள்ளோம். இந்த அமர்வுகள் வழக்கமாக ஒவ்வொரு கருத்தாய்வுக் குழுவின் இறுதி வாரத்தில் நிகழ்கின்றன.

# எங்களைத் தொடர்புகொள்க

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்களில் ஏதேனும் மாற்றம் இருந்தால், இக்கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் விதத்தில் உதவி தேவைப்பட்டால், அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது நீங்கள் கருத்துரை வழங்க விரும்பினால், தயவுசெய்து **6808 7910** என்ற எங்களுடைய நிலையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணை அழைக்கவும் (திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) அல்லது **slp@smu.edu.sg** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY